**பன்னாட்டுக் கடன் அட்டைகள் - குடியிருப்பாளருக்கான வசதிகள் தாராளமயமாக்கல்**

**A.P. (DIR Series) சுற்றறிக்கை எண்.103 (மே 21, 2003)**

**இந்திய ரிசர்வ் வங்கி**
**அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை**
**மைய அலுவலகம்**
**மும்பை 400 001**

மே 21, 2003

A.P.(DIR Series) சுற்றறிக்கை எண் 103

**அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வர்த்தகர் அனைவருக்கும்**

அன்புடையீர்,

**பன்னாட்டுக் கடன் அட்டைகள் - குடியிருப்பாளருக்கான வசதிகள் தாராளமயமாக்கல்**

பன்னாட்டுக் கடன் அட்டை பயன்பாடு குறித்த சுற்றறிக்கை A.P.(DIR Series) எண்.73, ஜனவரி 24, 2003 தேதியிடப்பட்டதை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கவனிப்பாராக.

2. தாராளமயமாக்கலின் ஒரு கட்டநடவடிக்கையாக நடைமுறையில் உள்ள அந்நியச் செலாவணி விதிமுறைகளின்படி, அனுமதிக்கப்பட்ட வகையில் அங்கீகரிக்கப்பட்ட வணிகரிடம் அல்லது அயல்நாட்டு வங்கியிடம் அயல்நாட்டு நாணய கணக்கு வைத்திருக்கும் தனிநபர் குடியிருப்பாளர்கள் கடல்மிசை வங்கிகளிடமிருந்தோ அவற்றின் புகழ்பெற்ற முகவர்களிடமிருந்தோ பன்னாட்டுக் கடன் அட்டைகளை சுலபமாகப் பெறலாம். இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ இந்த அட்டைகளைப் பயன்படுத்திச் செய்யப்படும் செலவு மற்றும் கட்டணத்தொகைகளை சம்பந்தப்பட்ட நபரின் மேற்சொன்ன அயல்நாட்டுக் கணக்கிலிருந்து அனுப்பபடும் பணத்திலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். கடன் அட்டை வெளியிட்ட முகவருக்கே இந்தப் பணம் அனுப்பபட வேண்டும்.

3. கடன் அட்டை பயன்பாட்டில் கிடைக்கும் கடனில் வரையறுக்கப் பட்ட தொகை அட்டை வெளியிட்ட வங்கி விதித்த வரம்புத் தொகையேயாகும். இந்த வசதியின்கீழ் பண அனுப்புதலுக்கு எந்த பண வரையறையையும் ரிசர்வ் வங்கி விதிக்கவில்லை.

4. தடைவிதிக்கப்பட்ட லாட்டரி டிக்கெட்கள், பத்திரிக்கைகள், சூதாட்டம், மீட்டு அழைப்பு வசதிகள் இவற்றிற்கான செலவுகளுக்கான தற்போது இருக்கும் தடைகள் குடியிருப்பாளர் பன்னாட்டுக் கடன் அட்டைகள் பயன்பாட்டிற்கும்

பொருந்தும் என்று தெளிவுபடுத்துகிறோம்.

5. இந்த சுற்றறிக்கையில் அடங்கியுள்ள விவரங்களைத் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் தத்தம் குழு சார்ந்த முகவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்வாராக.

6. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள் யாவும் FEMA 1999 (42 of 1999) ன் சட்டப்பிரிவு எண் 10(4) மற்றும் சட்டப்பிரிவு எண் 11(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

**கிரேஸ் கோஷி**
**தலைமைப் பொது மேலாளர்**